**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102114

1. District : மாவட்டம் Tenkasi | PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption | Year: ஆண்டு 2022 | FIR No.: மு.த.அ. எண் 02/2023 | Date: நாள் 16.05.2023

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Act 16 of 2018 — Sections பிரிவுகள்: 7 (b)
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 15.05.2023 — Date to : நாள் வரை
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 10.45 hrs — Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் — Time : நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 16.05.2023 — Time : நேரம் 09.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 5 Km South West.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி Maintenance Divisional Office, TWAD Board, Kudiyuruppu, Tenkasi.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் RAMASUBRAMANIAN
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.ARUNACHALAM
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 15.05.1964
(d) Nationality : நாட்டினம் INDIAN
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Maintenance Assistant
(g) Address : முகவரி Madasamy Kovil St., Thirikudapuram, Chokkampatti Kadayanallur Tk, Tenkasi District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.சீனி, கண்காணிப்பாளர், பராமரிப்பு கோட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், குடியிருப்பு, தென்காசி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay

GCP 240-34(Type 2) 90 000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 16.05.2022-ம் தேதி காலை 09.00 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் C.ஜெயஸ்ரீ ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது திரிகூடபுரத்தை சேர்ந்த திரு.A.ராமசுப்பிரமணியன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட தென்காசி குடியிருப்பில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தென்காசி-குற்றாலம் கூட்டு குடிநீர் பராமரிப்பு கோட்டத்தில் கண்காணிப்பாளராக பணிபுரியும் திரு.சீனி பற்றியும் ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு மத்திய சரக காவல் கண்காணிப்பாளர் பொறுப்பு தென் சரகம் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 16.05.2023-ம் தேதி காலை 10.30 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2023 u/s 7(b) of the PC Act 1988 as amended by Act 16 of 2018 என வழக்குப் பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் ராமசுப்பிரமணியன், த/பெ.அருணாசலதேவர், மாடசாமிகோவில் தெரு, திரிகூடபுரம், சொக்கம்பட்டி, தென்காசி மாவட்டம்.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A. Ramasubramanian

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

16/5/2023 at 11:35

Name: பெயர் C. JAYASREE
Rank: நிலை .....................No. எண் ..........
INSPECTOR OF POLICE

85266-49224. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்சஒழிப்புத்துறை, தென்காசிமாவட்டம். ஐயா, நான் தென்காசி மாவட்டம், சொக்கம்பட்டி, திரிகூடபுரம், மாடசாமி கோவில் தெருவில் வசித்துவருகிறேன். தென்காசி-குற்றாலம் கூட்டு குடிநீர் திட்ட பராமரிப்பு அலுவலகத்தில் பராமரிப்பு உதவியாளராக (Maintenance Assistant) பணிபுரிந்து வருகிறேன். நான் 1990 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு வரை திரிகூடபுரம் பஞ்சாயத்தில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி ஆப்ரேட்டராக தற்காலிக ஆப்ரேட்டராக பணிபுரிந்தேன். 1998 ஆம் ஆண்டில், பஞ்சாயத்துகளில் பணிபுரிந்த எங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு (TWAD Board) மாதம் ஆயிரம் ரூபாய் தொகுப்பூதியம் அடிப்படையில் பணிக்கு எடுத்தார்கள். 2003 ஆம் ஆண்டு குடிநீர் வடிகால் வாரியத்தில் தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்த எங்களை பணிநிரந்தரம் செய்ய சொல்லி எங்கள் சங்கத்தில் இருந்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தோம். எங்களை பணிநிரந்தரம் செய்ய நீதிமன்றத்தில் இருந்து உத்தரவு பெறப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 2006 ஆம் ஆண்டு மேற்படி நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் எங்களை பணிநிரந்தரம் செய்தார்கள். நாங்கள் 1998 ஆம் ஆண்டுமுதல் 2006 ஆம் ஆண்டு வரையில் பணிபுரிந்த காலத்திற்கான சம்பள நிலுவைத் தொகையினை வழங்க கேட்டு சங்கத்தில் இருந்து மீண்டும் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தோம். அதனடிப்படையில் 2021 ஆம் ஆண்டு எங்களுக்கு வரவேண்டிய சம்பள நிலுவைத்தொகையை வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அதன் பிரகாரம் எனக்கு நிலுவைத்தொகையாக ரூ.3,92,242/- வரவேண்டி இருந்தது. மேற்படி நிலுவைத்தொகை சம்பந்தப்பட்ட பில்களை தயார் செய்ய வேண்டியது எங்களது தென்காசி-குற்றாலம் கூட்டுகுடிநீர் திட்ட பராமரிப்பு கோட்ட அலுவலக கண்காணிப்பாளர் சீனி என்பவரது பணி ஆகும். எனக்கு வரவேண்டிய நிலுவைத்தொகை சம்பந்தமாக ஒருவாரத்திற்கு முன்பு கண்காணிப்பாளர் சீனி அவர்களை எங்கள் அலுவலகத்தில் சந்தித்து கேட்டபோது, எனக்கு சம்பள நிலுவைத்தொகை பட்டியல் அனுப்ப லஞ்சமாக பணம் ரூபாய் 15,000/- கொடுத்தால் தான் சம்பள நிலுவைத் தொகைக்கான பில்லை அனுப்புவேன் என்று சொன்னார். எனது சம்பள நிலுவைத்தொகையை வழங்க என்னிடம் இலஞ்சமாக பணம் கேட்டதால், அவர் மீது இலஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுக்க வேண்டும் என முடிவு செய்தேன். ஆனால்

அதற்கு ஏதாவது ஆதாரம் தேவைப்படும் என்பதால் செல்போனில் அவர் பேசுவதை பதிவு செய்ய முடிவு செய்தேன். ஆனால் எனது செல்போனில் பேசுவதை பதிவு செய்யும் வசதி இல்லாததால் 14.05.2023 ஆம் தேதி எனது மருமகன் ராமரிடம் 15.05.2023 ஆம் தேதி திங்கள் கிழமை அலுவலகம் சென்றவுடன் நான் கண்காணிப்பாளர் சீனியை சந்தித்து எனது சம்பள நிலுவைத்தொகை சம்பந்தமாக கேட்கும்போது அவர் லஞ்ச பணம் குறித்து கண்டிப்பாக என்னிடம் கேட்பார் என்றும், அதனால் நான் அலுவலகத்திற்குள் சென்று அவரைபார்த்து பேசும்போது எனது செல்போன் எண் 85266-49224 என்ற எண்ணிலிருந்து எனது மருமகன் செல்போன் எண் 90804-05327க்கு போன் செய்வதாகவும், அங்கு நடக்கும் உரையாடல்களை எனது மருமகனை அவரது செல்போனில் பதிவு செய்யவேண்டும் என்றும் கூறியிருந்தேன். அதன் பிரகாரம் எனது நிலுவைத்தொகைபில் சம்பந்தமாக 15.05.2023 ஆம் தேதி காலை சுமார் 10.46 மணிக்கு நான் எங்களது அலுவலக கண்காணிப்பாளர் சீனி அவர்களை சந்தித்து அவரிடம் எனது சம்பள நிலுவைத் தொகை சம்பந்தமாக பில் தயார் செய்து விட்டீர்களா எனக்கேட்டேன். அப்போது கண்காணிப்பாளர் சீனி அவர்கள் நிலுவைத்தொகை ரூ.3,92,200/- வந்துள்ளது. ஒரு பத்தாயிரம் ரூபாய் கொடுத்திடு என்று சொன்னார். நான் கொஞ்சம் குறைத்துகொள்ள கூடாதா என கேட்டதற்கு உங்கள மாதிரி ரெண்டு மூனு பேருதான் இப்டி இருக்கீங்க மத்தவங்கலாம் கரெக்டா இருக்காங்க, குடுக்குறதா இருந்தா குடு, இல்லனா நாள பின்ன GPF சம்பந்தமா எதுவும் எங்கிட்ட வந்தா நா போட மாட்டேன், என்னபத்திதான் உனக்கு தெரியும்ல. எனக்கு தெரியாது, என்று சொல்லிவிட்டார். நான் பணம் தரசம்மத்தித்ததும், அலுவலக ஊழியர் சங்கரை அழைத்து, இவருக்கு எழுதிகொடுங்க என்று கூறிவிட்டு, என்னை பார்த்து நீங்க போங்க நான் போட்டுவிடுகிறேன் என்று கூறினார். நான் வெளியில் வந்து திரிகூடபுரத்தில் இருந்த எனது மருமகன் ராமரிடம் அலுவலகத்தில் நடந்த உரையாடல்கள் பதிவாகி உள்ளதா என செல்போனில் கேட்டேன். அதற்கு எனது மருமகன் பதிவாகி உள்ளது என்று சொன்னார். எனக்கு இலஞ்சபணம் கொடுக்க விருப்பம் இல்லாததால், எனது சம்பள நிலுவைத்தொகையினை வழங்க ரூ.10,000/- இலஞ்சமாக என்னிடம் கேட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கண்காணிப்பாளர் சீனி அவர்கள் மீது இலஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் செய்யவேண்டும் என

நினைத்துக்கொண்டிருந்தேன். அப்போது 15.05.2023 ஆம் தேதி மாலை சுமார் 12.56 மணிக்கு என்னுடைய செல்போனுக்கு எனது கனரா வங்கி கணக்கு அக்கவுண்டிற்கு நிலுவைத்தொகை ரூ.3,93,700/- வரவாகியுள்ளதாக குறுஞ்செய்தி வந்திருந்தது. மேலும் 15.05.2023 அன்று இரவு சுமார் 8 மணிக்கு கண்காணிப்பாளர் சீனி அவரது செல்போன் எண்ணான 86374-07607 என்ற எண்ணிலிருந்து எனது செல்போன் எண்ணான 85266-49224 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு உங்களுக்கு அரியர் பணம் ஏறிவிட்டதா, எனபார்த்தீர்களா எனகேட்டார். நான் அரியர் பணம் ஏறிவிட்டதாக சொன்னேன். இருப்பினும் அவர் என்னிடம் இலஞ்சமாக பணம் கேட்டபோது, பணம் தரவில்லை என்றால் மேற்கொண்டு GPF மற்றும் எந்த பணப்பயன்கள் பெறுவதற்கும் என்னிடம் வந்துவிடாதே என்று கூறியதால் நான் பணம் கொடுக்காவிட்டால் அடுத்த ஆண்டு பணி ஓய்வு பெறப்போகும் எனக்கு பணப்பயன்கள் பெற்றுத்தரவும் லஞ்சம் கேட்பார். எனவே என்னிடம் எனது சம்பள நிலுவைத் தொகையினை வழங்க பட்டியல் அனுப்பியதற்கு ரூ.10,000/- லஞ்சமாக கேட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பராமரிப்பு கோட்ட கண்காணிப்பாளர் சீனி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (Sd.A.RAMASUBRAMANIAN) 16.05.2023.

Sir, Received the complaint on 16.05.2022 at 09.00 hrs, conducted confidential enquiry and obtained oral permission from Superintendent of Police, Central Range, i/c Southern Range, DVAC, Chennai and I registered a case in Tenkasi V&AC Cr.No.02/2023 u/s 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended by Act 16 of 2018 on 16.05.2023 at 10.30 hrs. sd.Tmt.C.Jeyasree, Inspector of Police, V&AC, Tenkasi.16.05.23

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகல்களை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

C. JAYASREE
INSPECTOR OF POLICE
V&AC Tenkasi
16/5/2023